முதல்வருடன் வைகோ சந்திப்பு

சென்னை, ஜூன் 17: முதல்வர் ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில் மதிமுக பொதுச் செயலர் வைகோ புதன்கிழமை சந்தித்துப் பேசினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜோசப் விஜய்யை புதன்கிழமை சந்தித்துப் பேசிய மதிமுக பொதுச்செயலர் வைகோ.

முன்னதாக பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வைகோவை செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியிருந்தார்.

முதல்வரைச் சந்திக்க தலைமைச் செயலகத்துக்கு புதன்கிழமை வந்த வைகோவை, அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் ஆகியோர் வரவேற்றனர். முதல்வருடனான சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, 'ஸ்டெர்லைட் ஆலைக்கு மீண்டும் தமிழகத்துக்குள் அனுமதி அளிக்கக் கூடாது என முதல்வரைச் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளேன். முதல்வர் விஜய் வெளிப்படைத்தன்மையுடன் இருக்கிறார். கையூட்டு, ஊழல் என்ற சொற்களுக்கு இடமளிக்காமல் தவெக அரசு செயல்படுகிறது. ஊழல் இல்லாத ஆட்சியாக தவெக ஆட்சி உள்ளது என்றார்.

மதிமுக எம்எல்ஏக்கள் ராஜிநாமாவா?: மதிமுக எம்எல்ஏக்கள் ராஜிநாமா செய்கிறார்களா என்ற கேள்விக்குப் பதிலளித்த வைகோ, 'ஊகங்களுக்கு பதில் சொல்ல முடியாது. கூட்டணி குறித்து பொதுக் குழுவைக் கூட்டி ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். மதிமுக உறுப்பினர்களின் நிலைப்பாடு குறித்து சட்டப்பேரவையில் தெரியவரும். ஆட்சியில் நல்லது நடந்தால் வரவேற்பேன்; கெட்டது நடந்தால் எதிர்ப்பேன்' என்றார்.

பேரவையில் அதிக கேள்விகளை எழுப்ப வேண்டும்

திமுக எம்எல்ஏ-க்களுக்கு மு.க. ஸ்டாலின் அறிவுரை

சட்டப்பேரவைக் கூட்டத் தொடரை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் புதன்கிழமை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற திமுக பேரவை உறுப்பினர்கள் கூட்டம். உடன்,(இடமிருந்து) திமுக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கொள்கை பரப்புச் செயலர் கோவி.செழியன், திமுக கொறடா எ.வ.வேலு, துணை பொதுச்செயலர் ஐ.பெரியசாமி, முதன்மைச் செயலர் கே.என்.நேரு, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி.

சென்னை, ஜூன் 17: சட்டப்பேரவையில் மக்கள் நலன் சார்ந்து அதிக கேள்விகளை எழுப்புமாறு திமுக எம்எல்ஏ-க்களுக்கு அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தலுக்குப் பிந்தைய முதல் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் ஆளுநர் உரையுடன் வியாழக்கிழமை (ஜூன் 18) தொடங்கவுள்ளது. இந்த நிலையில், திமுக எம்எல்ஏ-க்கள் கூட்டம் சென்னை அறிவாலயத்தில் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கொறடா எ.வ.வேலு, மூத்த நிர்வாகிகள் மற்றும் எம்எல்ஏ-க்கள் கலந்து கொண்டனர். சட்டப்பேரவையில் ஆளுங்கட்சியின் வியூகங்களைத் திறம்பட எதிர்கொள்வது குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியதாக வெளியான தகவல்கள்:

திமுக கூட்டணிக் கட்சிகள் ஆதரவுடன் இந்த ஆட்சி அமைந்துள்ளது. சட்டப்பேரவையில் வலுவான எதிர்க்கட்சியாக சிறப்பாகச் செயலாற்ற வேண்டும். ஆளுங்கட்சி மீதான அதிருப்தியில் உள்ள மக்கள் வீதியில் இறங்கிப் போராடக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால், பேரவையில் பொதுமக்கள் பிரச்னைகளுக்கு கடுமையாக வாதங்களை முன்வைக்க வேண்டும். புதிய உறுப்பினர்கள் மூத்த உறுப்பினர்களைக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

சட்டப்பேரவை அலுவல்களில் 100 சதவீதம் கலந்துகொள்ள வேண்டும். பேரவைக்கு முன் தயாரிப்புடன் செல்ல வேண்டும். மக்கள் நலன் சார்ந்து அதிக கேள்விகளைக் கேட்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கொறடாவை அழைத்துச் சென்று கோரிக்கை மனுக்களை வழங்க வேண்டும்.

தொகுதி மக்களை தொடர்ந்து சந்திக்க வேண்டும். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் திமுகவினர் உதவி செய்ய ஓடி வருவார்கள் என்று மக்கள் கூறவேண்டும் என்று மு.க.ஸ்டாலின் எம்எல்ஏ-க்களிடம் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காவல் துறை விசாரணையின்போது உயிரிழந்த இளைஞரின் உடல் 3 மாதங்களுக்குப் பிறகு தகனம்

மதுரை, ஜூன் 17: சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் காவல் துறை விசாரணையின் போது உயிரிழந்த இளைஞரின் உடல் 3 மாதங்களுக்குப்பிறகு மதுரை தத்தனேரி மின் மயானத்தில் புதன்கிழமை அரசு சார்பில் தகனம் செய்யப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையைச் சேர்ந்த இளைஞர் ஆகாஷ் டெலிசனை குற்ற வழக்கு தொடர்பாக காவல் துறையினர் கடந்த மார்ச் மாதம் கைது செய்தனர். விசாரணையின் போது, தப்பிச் சென்ற ஆகாஷ் டெலிசனுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகக் கூறி, அவரை காவல் துறையினர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அங்கு அவர் கடந்த மார்ச் 8-ஆம் தேதி உயிரிழந்தார்.

இதையடுத்து, ஆகாஷ் உயிரிழப்புக்கு காரணமான காவல் துறையினரைக் கைது செய்ய வேண்டும் எனவும், அவரின் குடும்பத்துக்கு ரூ. 50 லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும், எஸ்.சி., எஸ்.டி. சட்டப் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் அவரது உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். மேலும், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிடக் கோரி, ஆகாஷின் தந்தை ராஜேஷ்கண்ணன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடுத்தார். இதையடுத்து, ஆகாஷ் இறப்பு வழக்கை சிபிசிஐடி போலீஸார் விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இருப்பினும், தங்களது கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை எனக் கூறி, உடலை வாங்க மறுத்து ஆகாஷின் உறவினர்கள் கடந்த 100 நாள்களுக்கும் மேலாகப் போராட்டம் நடத்தி வந்தனர். இதனால், ஆகாஷின் உடல் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையின் உடல்கூறாய்வு செய்யும் அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஆகாஷின் உடலை அவரது பெற்றோர் பெற்றுக்கொள்ள வேண்டும், இல்லையெனில், அரசு சார்பில் இறுதிச் சடங்கு செய்யப்படும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி விக்டோரியா கௌரி அண்மையில் உத்தரவிட்டார். அதன்படி, ராஜாஜி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த ஆகாஷின் உடல் 102 நாள்களுக்குப் பிறகு, வருவாய்க் கோட்டாட்சியர் கருணாகரன் முன்னிலையில் மதுரை தத்தனேரி மின் மயானத்துக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு சென்று உறவினர்கள் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது.

50 பேர் கைது... முன்னதாக, ராஜாஜி அரசு மருத்துவமனையிலிருந்து ஆகாஷின் உடலை தகனம் செய்ய கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடிய உறவினர்கள், பல்வேறு அரசியல் அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட 50-க்கும் மேற்பட்டோரை போலீஸார் கைது செய்தனர்.

முதல்வர் விஜய், உதயநிதி, தமிழிசைக்கு எதிரான வழக்குகள் தள்ளுபடி

சென்னை, ஜூன் 17: வேட்புமனுவில் சொத்து விவரங்களை மறைத்தது தொடர்பாக முதல்வர் விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் ஆகியோருக்கு எதிராக வருமான வரித் துறை விசாரணை நடத்தக் கோரிய மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பெரம்பூரைச் சேர்ந்த விக்னேஷ் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், முதலும் தவெக தலைவருமான விஜய், சட்டப்பேரவைத் தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு என இரு தொகுதிகளில் போட்டியிட்டார். இந்த இரு தொகுதிகளிலும் அவர் தாக்கல் செய்துள்ள வேட்புமனுக்களில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளன. பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்திருந்த வேட்புமனுவில் தனது சொத்து மதிப்பு ரூ.115.13 கோடி என்றும், திருச்சி கிழக்கு தொகுதியில் தாக்கல் செய்திருந்த வேட்புமனுவில் சொத்து மதிப்பு ரூ.220.15 கோடி என்றும் விஜய் தெரிவித்துள்ளார். எனவே, விஜய் தாக்கல் செய்துள்ள இந்த இரு வேட்புமனுகளில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் உண்மையானது தானா? அவர் அளித்துள்ள விவரங்கள் முழுமையானதாக உள்ளதா? என்பதை உறுதி செய்ய வருமான வரித்துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி: சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்டார். 2021-ஆம் ஆண்டு அவர் தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களுக்கும், தற்போது தாக்கல் செய்துள்ள சொத்துவிவரங்களுக்கும்முரண்பாடுகள் உள்ளன. எனவே, இதுதொடர்பாக வருமான வரித் துறை விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என அந்தத் தொகுதியைச் சேர்ந்த குமாரவேல் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

மயிலாப்பூர் தொகுதி: மயிலாப்பூர் தொகுதி வாக்காளரான கௌதம் சிவா, சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், மயிலாப்பூர் தொகுதியில் பாஜக சார்பில் தமிழிசை சௌந்தரராஜன் போட்டியிட்டார். தமிழிசை சௌந்தரராஜன், அவரது கணவர், மகள் ஆகியோர், 2020 முதல் 2023-ஆம் ஆண்டு வரை தாக்கல் செய்த வருமான வரி கணக்கு விவரங்கள் குறித்து, 2024-ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், தற்போது தாக்கல் செய்த வேட்புமனுவில் உள்ள விவரங்கள் ஏற்கெனவே அவர் தாக்கல் செய்திருந்த விவரங்களுக்கு முரணாக உள்ளது. இதுகுறித்து தேர்தல் ஆணையம் மற்றும் வருமான வரித்துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்குகள் அனைத்தும் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் நிரஞ்சன் ராஜகோபால், முதல்வர் ஜோசப் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுவை திருத்தம் செய்து புதிய மனுவை ஏற்கெனவே தாக்கல் செய்துவிட்டார்.

இரு தொகுதிகளிலும் அவர் குறிப்பிட்டிருந்த சொத்து மதிப்புகள் சரியாக உள்ளன. இந்த விவகாரம் குறித்து தேர்தல் வழக்குத் தான் தொடர முடியும். ஏற்கெனவே இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், முதல்வர் ஜோசப் விஜய், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். ஏதேனும் குறைகள் இருந்தால், மனுதாரர்கள் தேர்தல் வழக்குத் தாக்கல் செய்யலாம் என நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

தீயணைப்பு ஆணையத் தலைவர், உறுப்பினர்கள் ராஜிநாமா

சென்னை, ஜூன் 17: தமிழக தீயணைப்பு ஆணையத் தலைவராக இருந்த ஓய்வு பெற்ற டிஜிபி சங்கர் ஜிவால், தனது பதவியை ராஜிநாமா செய்தார். இதேபோல அந்த ஆணையத்தின் உறுப்பினர்களும் ராஜிநாமா செய்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தமிழகத்தில் தவெக அரசு ஆட்சி அமைந்ததையடுத்து, கடந்த திமுக ஆட்சியில் பல்வேறு பொறுப்புகளில் நியமிக்கப்பட்டவர்கள், தங்களது பொறுப்புகளை ராஜிநாமா செய்து வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக தமிழக தீயணைப்பு ஆணையத் தலைவராக இருந்த சங்கர் ஜிவாலும் (**படம்**), அதன் உறுப்பினர்களும் தங்களது பொறுப்புகளை ராஜிநாமா செய்து தமிழக அரசுக்கு புதன்கிழமை கடிதம் அனுப்பினர். இதேபோல, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவராக இருந்த ஓய்வு பெற்ற டிஜிபி சுனில்குமாரும் தனது பொறுப்பை ராஜிநாமா செய்து கடிதம் அனுப்பினர்.

நடிகை கௌதமியிடம் ரூ.25 கோடி மோசடி: 6 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை

சென்னை, ஜூன் 17: நடிகை கௌதமியிடம் ரூ.25 கோடி மோசடி செய்தவரின் வீடு, அலுவலகம் உள்பட 6 இடங்களில் அமலாக்கத் துறையினர் புதன்கிழமை சோதனை செய்தனர்.

நடிகை கௌதமி, கடந்த 2023-ஆம் ஆண்டு சென்னை பெருநகர காவல் துறை மத்திய குற்றப் பிரிவில் புகார் அளித்தார்.

அதில், குடும்ப நண்பரான வேளச்சேரியைச் சேர்ந்த அழகப்பன் ஸ்ரீபெரும்புதூரில் இருந்த தனக்குச் சொந்தமான ரூ.25 கோடி மதிப்புள்ள 46 ஏக்கர் நிலத்தை, ரூ.6கோடிக்குகொடுத்துஏமாற்றிவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். அதன்பேரில், சென்னை காவல் துறையின் மத்திய குற்றப் பிரிவினர் வழக்குப் பதிவு செய்து, விசாரித்தனர்.

இதையடுத்து கேரள மாநிலம் திருச்சூரில் இருந்த அழகப்பனையும், அவரது குடும்பத்தினரையும் போலீஸார் கைது செய்தனர்.

அமலாக்கத் துறை விசாரணை: முன்னதாக, இந்த வழக்கின் விசாரணையின்போது, அழகப்பன் வீட்டில் இருந்து சில ஆவணங்களைப் பறிமுதல் செய்தனர். அதில் ஆஸ்திரேலியாவில் அழகப்பன் குடும்பத்தினர் முதலீடு செய்ததற்கான ஆவணங்களைக் கைப்பறியாதாகக் கூறப்படுகிறது. விசாரணையில், அழகப்பன் சட்டவிரோத பணப் பரிவர்த்தனையில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. இது தொடர்பாக விசாரணை செய்ய மத்திய குற்றப்பிரிவு போலீஸார் பரிந்துரை செய்ததன் பேரில், அமலாக்கத் துறையினர் விசாரணையில் ஈடுபட்டனர்.

6 இடங்களில் சோதனை: சட்டவிரோத பணப் பரிமாற்றம் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் வகையில், வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள அழகப்பன் வீடு உள்ளிட்ட தொடர்புடைய 6 இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை செய்தனர். கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், நகை, பணம் குறித்த தகவல்களை தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

மாண்புமிகு கடன்கள் மீட்பு தீர்ப்பாயம்-II, சென்னை முன்னிலையில்
O.A.எண். 621 / 2025
பாரத ஸ்டேட் வங்கி,
RACPC செங்கல்பட்டு கிளை (64143),
ஜெயா 17, ஆழகேசன் தெரு,
செங்கல்பட்டு- 603 001.
பிரதிநிதியாக அதன் முதன்மை மேலாளர்,
...மனுதாரர்
-எதிர்-
திரு.V.பாலசந்திரன், த/பெ.வேந்தன்
குடியிருப்பு முகவரி: எண்.3/206,
இலுப்பதுல தெரு, ஆதனூர் கிராமம்
மற்றும் அஞ்சல், ஆரணி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
...பிரதிவாதி
தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அசல் அறிக்கையில் காணப்படும் விவரங்களுக்கு பதிலளிக்கும் பொருட்டு நீங்களோ அல்லது தங்களின் வழக்கறிஞர் வாயிலாகவோ அல்லது தங்கள் சார்பில் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்க கூடிய ஒருவரோ 24.07.2026 அன்று காலை 11.00 மணிக்கு, மாண்புமிகு தீர்ப்பாயம், முன்னிலையில் ஆஜராகுமாறு கோரப்படுகிறது. ஆகவே தங்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று முற்பகலில் ஆஜராக வேண்டும். மேற்குறித்த தேதி, நேரத்தில் தீர்ப்பாயத்துக்கு முன் ஆஜராகத் தவறினால் நீங்கள் இல்லாமலேயே வழக்கு விசாரணை நடத்தப்பட்டு தீர்மானிக்கப்படும்.
M.சுரேஷ்
மனுதாரரின் வழக்கறிஞர்

GOVERNMENT OF TAMILNADU
Forest Department
ELECTRONIC TENDER NOTICE
Ref.No.ERDDIV / 507 / 2025-JDO. Dated:10.06.2026
1.For details, visit www.tntenders.gov.in
2. Bids are invited by District Forest Officer, Erode Forest Division of TamilNadu State under Two Cover System for the following work.

SL. No.	Name of Work
1	Maintenance and Upgradation of the BT road from Thamaraikarai to Thalakarai Road is Km of 0/00 to 5/600 in length and 3.75m carriageway width at Bargur Range.

3. The Bid documents can be downloaded from www.tntenders.gov.in between 12.06.2026 and 13.07.2026,11.00 AM.
4. The Last Date and Time for submission of Bid documents: 13.07.2026 11.00 AM.
5. Opening of Bid documents will be held on 15.07.2026 11.00 AM at District Forest Office, Erode Forest Division, Mullaiyagam, Roja Nagar, Veerappanchathiram (P.O), Erode District - 638004.
District Forest Officer,
Erode Forest Division, Erode
DIPR /2041 / Tender / 2026

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
சென்னை சரகம்-I
(மேற்பார்வை பொறியாளர், சென்னை சரகம் -I),
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், 18(9), 7வது தளம், தலைமை வளாக கட்டடம்,
முதல் பிரதான சாலை, சிறு நகர், சென்னை-35.
மின் அஞ்சல்: secctnhb@gmail.com, தொலைபேசி எண் - 044-24322070
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்: CC-I/01/2026-27 நாள்: 16.06.2026

பணியின் பெயர்	பணியின் தோராய மதிப்பு இலட்சங்களில், ரூபாய் (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட)	முன் வைப்புத் தொகை ரூபாய்
சென்னை மாவட்டம், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், திருமங்கலத்தில் செயல்பட்டு வரும் 606 அரசு வாடகை குடியிருப்புகளின் 2026-2027 (16.07.2026 முதல் 31.03.2027 வரை) ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வது தொடர்பாக	73.16	47,000.00

1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் எனைய ஆவணங்களுக்கு https://tntenders.gov.in-ல் தெரிந்து கொள்ளவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்பிக்கப்படுவதற்கான நாள் மற்றும் நேரம் 18.06.2026, 11.00 A.M மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்பிக்கப்படுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் 02.07.2026, 11.00 A.M
3. ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 02.07.2026 காலை 11.30 மணி
4. விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை https://tntenders.gov.in-ல் என்ற இணையதளத்தில் காணலாம்.
செ.ம.தொ.இ./ 2060 /ஒப்பந்தப்புள்ளி/2026
மேற்பார்வை பொறியாளர், சென்னை சரகம்-I

தினமணி கதிர்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மண்டல அலுவலகம்-பாண்டிச்சேரி
9-11, 100 அடி ரோடு, ஜான்சி நகர் கார்னர், பாண்டிச்சேரி - 605 004 Ph: 0413 - 2207825
அசையா சொத்துக்களுக்கான இ - ஏல விற்பனை
பொது அறிவிப்பு
கடன்பட்ட சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடன்பட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையறலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) / 9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரரிடமிருந்து வரவேண்டிய கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகையினை வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கியிடம் பிணையப்படுத்தப்பட்ட / நடு வைக்கப்பட்ட கவரதீனம் செய்து கொண்ட கீழ்கண்ட அசையாச் சொத்துக்களை 04.07.2026 தேதியன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துகிறது. இந்த சொத்துகள் "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" விற்கப்படும். குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித்தொகை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	கிளையின் பெயர் / கடன்தாரர்கள் பெயர் / உரிமையாளர் பெயர் / கடன் நிலுவைத்தொகை & வட்டி, இதர செலவுகள்	சொத்துக்கள் விவரம்	குறைந்தபட்ச கேட்பு விலை / EMD / ஏல உயர்வுத்தொகை / கிளை மேலாளர் பெயர் & தொடர்பு எண்
01.	கடலூர் OT / கடன்தாரர் / அடமானதாரர்: Mr.G.முத்துகிருஷ்ணன் 01.05.2026 அன்றுள்ளபடி ₹ 28,31,447.42	புதிய RS எண்.122/14, நீர்ழி, இடங்கொண்டம்பட்டு கிராமம், ஆயிக்குப்பம் பஞ்சாயத்து, குறிஞ்சிபாடி பஞ்சாயத்து யூனியன் மற்றும் தாலுகா, கடலூர் மாவட்டம் - 607301 என்னும் முகவரியிலுள்ள 9583.20 சதுர அடி குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம். எல்லைகள்: சாலைக்கு வடக்கு, ஆறுமுகம் பிள்ளை வீடு மற்றும் வீட்டு மனைக்கு தெற்கு, சாலைக்கு கிழக்கு, மாணிக்கம் பிள்ளை மற்றும் ராதாகிருஷ்ணன் நிலத்திற்கு மேற்கு, சொத்தானது Mr.G.முத்துகிருஷ்ணன், S/o.கோவிந்தராஜுலு நாயுடு பெயரிலுள்ளது.	₹ 40,80,000/- / ₹ 4,08,000/- / ₹ 25,000/- Mangaleshwari Mob: 95008 85682
02.	ஏம்பலம் கிளை / கடன்தாரர்: M/s.ஸ்ரீ பாலாஜி ரைஸ் ஸ்டோர் உரிமையாளர்: Mr.அழகேசன் S, உரிமையாளர்/அடமானதாரர்: Mr.அழகேசன்.S ஜாமீன்தாரர்: Mrs.வாகை.A 01.05.2026 அன்றுள்ளபடி ₹ 21,71,840/-	R.S.எண்.242/4, கதாஸ்தர் எண்.1080/3/4, நத்தம்பேடு கிராமம், ஏம்பலம் வருவாய் கிராமம், பாகூர், புதுச்சேரி, நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்து என்னும் முகவரியில் உள்ள 5580 சதுர அடி நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். சொத்தானது Mr. அழகேசன் S, S/o.சீனுவாசன்-க்கு சொந்தமானது. எல்லைகள்: செல்வராக முதலியார் மனை மற்றும் தோட்டத்துக்கு வடக்கு, புறம்போக்கு கால்வாய் (தற்போது வழிப்பாதை உபயோகப்படுத்தப்படுகிறது)-க்கு தெற்கு, பஞ்சாட்சத்ர முதலியார் மனைக்கு கிழக்கு, செல்வராக முதலியார் மனை மற்றும் தோட்டத்துக்கு மேற்கு.	₹ 16,00,800/- / ₹ 1,60,100/- / ₹ 50,000/- Sakthivel Mob: 98943 90857

இ-ஏல தேதி மற்றும் நேரம்: 04.07.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை
https://baanknet.com/ என்ற இணையத்தளத்தில் நடைபெறும்
விற்பனை முடியும் வரை தலா 10 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்
சொத்துக்களை பார்வையிடுதல்: அந்தந்த கிளைகளில் 03.07.2026 வரை மாலை 4.00 மணிக்குள் | விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்கும் தேதி : 25.06.2026 முதல் | விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்க கடைசி தேதி: 03.07.2026 மாலை 4.00 மணி வரை
*மேலே குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச கேட்பு விலைகளில் அதற்கு பொருந்தக்கூடிய TDS தொகை சேர்க்கப்படவில்லை
உயர்ந்தபட்ச விலைக்குறிப்பீடு / விற்பனை தொகையில் 1% TDS-ஐ வெற்றிபெற்ற விலைக்குறிப்பீட்டாளரே / வாங்குபரே செலுத்த வேண்டும்.
விரிவான ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, சேவை வழங்குனர் இணைத்தளமான https://baanknet.com/ அல்லது வங்கியின் இணையத்தளமான www.iob.bank.in பார்க்கவும்.
மேலும் விவரங்களுக்கு, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் தொடர்பு எண். 8291220220, M/s PSB அலையன்ஸ் லிமிடெட், அதுள் பதிவு அலுவலகம் யூனிட் -1, 3வது தளம், VIOS கமர்சியல் டவர், வடலா ட்ரக் டெர்மினல் அருகில், வடலா கிழக்கு, மும்பை - 400 037 operation time of Help desk: 8:00 am to 8:00 pm). உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏல சேவை வழங்குனரின் இணையதளமான https://baanknet.com/ல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். Support at support.baanknet@psballiance.com
கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோர்களுக்கு சம்மந்தப்பட்ட கடனிற்கான மேற்குறித்த தேதியில் நடைபெறும் இ-ஏலம் குறித்த 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) மற்றும் விதி 9(1)ன் கீழான அறிவிப்பும் இதுவேயாகும்.
இடம் : கடலூர் / ஏம்பலம்
தேதி : 16.06.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

பொது அறிவிப்பு
ICICI Bank
கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., 4/10, வைத்ரி டவர், பெம்மனஹள்ளி ஒகுர் முதன்மைச் சாலை, பெங்களூரு - 560068.
கீழ்க்காணும் கடன்தாரர்கள் ICICI வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அசலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதால் அந்தக் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன.
இந்தகான, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு கடைசியாகத் தெரிந்த அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது சார்பு செய்யப்படாததால் இப்படிப் பொது அறிவிப்பு மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தார் / கூட்டுக் கடன்தார் / ஜாமீன்தார் பெயர் (கடன் கணக்கு எண்) மற்றும் முகவரி	நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய கடனீட்டுச் சொத்தின் முகவரி	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் / அறிவிப்பு நாள்படி நிலுவைத் தொகை	NPA நாள்
1.	ராஜேந்திரன் எஞ்சினீரிங், பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையாளர்: குமரி ராஜவேல், எண் 157, மா